(உ) உறுப்பினர்கள் அவரவர்க்குரிய இடங்களிலிருந்து பேசுதல்.

*திரு. இராம. அரங்கண்ணல்: பாயின்ட் ஆஃப் ஆர்டர். நம் சபை மரபுப்படி எந்த ஒழுங்குப் பிரச்னையை அல்லது பிரச்னைகளை எழுப்பவேண்டுமென்று சொன்னாலும் உங்களால் ஒதுக்கப் பட்டுள்ள இடத்திலிருந்து, அந்த இடத்திலிருந்துதான் அந்தப் பிரச்னையை எழுப்பவேண்டும். ஆனால் எந்த இடத்திலிருந்து கனம் உறுப்பினர் அப்பிரச்னையை எழுப்பினார்கள்? எந்த விதிக் குட்பட்டு எழுப்பினார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் அவரவர்கள் இடத்திலிருந்து பேசவேண்டுமென்று விதிகள் இருக்கின்றன. (ஆரவாரம்.) மதிப்பிற்குரிய உறுப்பினர் 'சொந்த விளக்கம் கூற விரும்புகிறேன்' என்றார்கள். சொந்த விளக்கம் எப்போது கூறலாம் என்றால் அவர்களைப்பற்றி யாராவது பேசியிருந்தால் கூறலாம். அவர்களைப்பற்றி நான் பேசிய காரணத்தினால் அவர்கள் சொந்த விளக்கத்தைச் சொல்ல நான் அனுமதிக்கிறேன்.

4. சொந்த விளக்கம்—வினா நேரம் இல்லாமமை குறித்து.

THIRU K. VINAYAKAM: I was glad to know from the Chair that at least ninteen days would have to elapse before the answer could be got ready so as to enable the Minister to reply. This Assembly came into being on the 1st March and I have given notice of questions on that very day. To-day is 21 I believe, twenty days have elapsed and a reasonable time has been given to the Government. I would like to know why they are not in a position to got the answers.

மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர்: கேள்விகள் அனுப்ப ஒரு உறுப்பினருக்கு உரிமை எப்போது இருக்கிறது என்றால், அவர் பிரமாணம் எடுத்து சபையின் உறுப்பினராக ஆன பிறகுதான் அவருக்கு உரிமையென்று விதியிருக்கிற காரணத்தினால், அதற்குப் பிறகு 19 நாட்கள் ஆகியிருந்தால் அவர் தனியாக என்னிடம் தெரிவித்தால், அவசரப்படுத்தி கேள்விகளுக்குப் பதில் கிடைக்க ஏற்பாடு செய்ய நான் தயாராக இருக்கிறேன்.

இப்போது அடுத்த அலுவல். 1966–67-ம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை அவையின் முன் வைத்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றுவார்கள்.

5. 1966–67-ம் ஆண்டுக்கான இறுதித் துணை மதிப்பீடுகள்—
பேரவையின் முன் வைத்தல்

மதிப்பிற்குரிய திரு. சி. என். அண்ணாதுரை: சட்டமன்றத் தலைவர் அவர்களே,

1966-67-ம் ஆண்டுக்குரிய இறுதித் துணை மதிப்பீடுகளை மன்றத் தின்முன் வைக்கின்றேன். மானியக் கோரிக்கைகளை விளக்கும் விரிவான விவர அறிக்கை ஒன்றும் மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளது. இத்துணை மானியக் கோரிக்கையில்